# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய***

## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2023.11.10 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*

***ஈட்டுச்சட்டம் (திருத்தம்)***

***(89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விலை: ரூபா 9.00** **தபாற்செலவு : ரூபா 50.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ச.வ.ஒ. 65/2017

**ஈடு (திருத்தச்) சட்டமூலம் சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** இவ்வாசகம் (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தில் 68அ என்னும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் பிரிவின் சட்டப்பயனானது, 2023 ஆம் ஆண்டின்........... ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் அசையும் ஆதனம் தொடர்பில் ஈட்டுச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்புடைமையினை வரையறுப்பதற்குமாகும்.

*ச.வ.ஒ. 65/2017*

**(89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க ஈட்டுச் (திருத்த) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** பின்வரும் புதிய பிரிவானது, (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 68 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 68அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும். 89 ஆம் அத்தியாயத்தில் 68அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்

"அசையும் ஆதனத்திற் கான பாகம் III இன் ஏற்புடைமை

68அ. இச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்பாடுகள், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாகவிராத வரையில் ஏதேனும் அசையும் ஆதனத்திற்கு மட்டும் ஏற்புடையதாதல் வேண்டும். ".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.